# கன்னித் தமிழ் சந்தம் எடுத்து

கன்னித் தமிழ் சந்தம் எடுத்து
கவிதைகள் யான் வடித்து
காணிக்கை கொண்டு வந்தேன்
பாலகனே ஆரி ராரி ராரி ராரோ
பதமலர் பணிந்து நின்றேன் பாலகனே

**1**
குயில் தன் குரலெடுத்து ஆ.....ஆ (2)
குழலுடன் யாழெடுத்து
இன்னிசை முழங்கி வந்தேன் இனியவனே
பூவிதழ் தான் திறந்து புவிதனில் நீ பேசும்
மழலையைக் கேட்க வந்தேன் மாதவனே
எளியவனே இறையவனே....(3)
என்னுடன் தங்கிட வந்தவனே

**2**
மல்லிகை சரம் தொடுத்து ஆ......ஆ (2)
மனதினை அதில் இணைத்து
மாலையைச் சூட வந்தேன் மன்னவனே
விண்ணெழில் தாங்கி வரும் உன்னெழில் திருவதனம்
கண்டிட வேண்டி நின்றேன் விண்ணவனே
மனுமகனே திருச்சுதனே....(3)
மனிதர்க்கு மீட்பைத் தந்தவனே